திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் திட்டத்தின்கீழ் மேம்பாடு மனை திட்டம் வழங்கப்படுகிறது. இந்த உலக வங்கி திட்டத்தின் மூலம் செயல்படுத்துகின்றபோது அந்த தொகை எவ்வாறு பெறப்பட்டு திருப்பிச் செலுத்தப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நாளைக்கு மானியக் கோரிக்கை வருகிறது. அதிலே பேசுகிறபோது விரிவாகப் பேசி பதில் கூறலாம்.

தர்மபுரி மாவட்டத்தில் கிராம கூட்டுறவு வீடுகட்டும் திட்டம்

601—(* வினா எண் 9586) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் பல வட்டங்களில் கிராம கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டு வீடுகட்டும் பணி நிதி வழங்காமையின் காரணமாக பூர்த்தி ஆகாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் வீடு கட்டுவதற்குக் கடன் அனுமதிக்கப்பட்டவர்களில் 1,271 உறுப்பினர்கள் முதல் அல்லது இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொண்டு கட்டிடப்பணியையே தொடங்காமலும், கட்டிடப்பணியை தொடங்கிய இனங்களில் கடனாகப் பெற்ற தொகையை அப்பணியில் முழுமையாகப் பயன்படுத்தாமலும் இருந்து வருவதனால் இவர்களுடைய வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் உள்ளன.

1987 மே 5]

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே குறிப்பிட்டதுபோல தர்மபுரி மாவட்டத்திலே குறிப்பாக மொரப்பூர் தொகுதியிலே நான் சார்ந்த அரூர் தாலுக்காவில் நான் அறிந்து ஏறத்தாழ 500-க்கு மேற்பட்ட கிராமங்களில் வீடு கட்டக் கடன் வழங்கப்பட்டு முதல் தவணை கடன் கொடுக்கப்பட்டது. அந்த மொத்த கடன் தொகை ரூ. 5,000 என்று அனுமதிக்கப்பட்டு முதல் தவணை கொடுக்கப் பட்டு, அந்த தவணையில் கட்டடங்கள் கட்டிப் பூர்த்தி அடை யாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவு இலாகா அதிகாரிகளைக் கேட்டதற்கு நிதி எங்களுக்குக் கிடைக்கப்படாமையால் அடுத்த தவணை கொடுத்து வேலை பூர்த்தி செய்யமுடியாத நிலை இருக்கிறது என்று காரணம் கூறியிருக்கிறார்கள். அதற்கு மொத்த தொகை ரூ. 5,000 என்று இருக்கின்ற நிலைமையை மாற்றி விலைவாசிகள் இன்றைக்கு ஏற்றம் அடைந்திருப்பதால், வீடு கட்டுவதற்கான உபகரணங்கள் சாமான்கள் விலை கூடுதலாக இருப்பதால், ரூ. 5,000 என்பதை ரூ. 10,000 ஆக மாற்றி இப்போது நிலுவை யாக பூர்த்தி அடையாமல் இருக்கக்கூடிய வீடுகளை கட்டி பூர்த்தி செய்து கொடுப்பதற்கு இந்த ஆண்டு நிதியுதவி வழங்கி பூர்த்தி செய்ய அரசு முயலுமா என்பதைப் பற்றி அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப்புறங்களிலே சங்கங் களின் மூலமாக ரூ. 5,000 அல்லது 6,000 அனுமதிக்கப்பட்டு அதிலே ரூ. 4,500 கடனாக வழங்கப்படுகிறது. சுமார் ரூ. 1,500 அளவிற்கு அந்தந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலே அதை சேர்த்துக்கொண்டு வீடு கட்டவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த சங்கங்களிலே முதல் தவணையாக அடித்தளம் கட்டுவதற்கு 30 சதவிகிதம் முதலிலே வழங்கப்படுகிறது. கூரை மட்டம் வரை கட்டுவதற்கு 40 சதவிகிதம். அதற்குப் பின்னாலே மீதம் இருக்கின்ற 30 சதவிகிதம் வீடு முழுவதுமாக கட்டப்படுவதற்கு தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த பகுதியிலே 1034 உறுப்பினர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். இதிலே பிரச்சினை என்னவென்றால் முதல் தவணை கொடுக்கப்பட்டு,

[1987 மே 5

அவர்கள் வாங்கிய பணத்தில் இருந்து அவர்கள் சொன்ன பிரகாரம் வீடு கட்டாமல் இருக்கிறது. அடித்தளத்திற்கு பேஸ் மட்டத்தில் இருந்து இரண்டாவது கட்டம் முடிக்காமல் இருக்கின்ற காரணத்தினாலே, மூன்றாவது கட்டத்திற்கான தவணை கொடுக்கப்பட முடியாமல் இருக்கின்றது. அந்தப் பணியை முழுமையாகச் செய்வார்களானால் தவணைக்குரிய பணம் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வாலாஜாபாத் யூனியன் காமாட்சி அம்மன் நூற்பாலை

602—(*வினா எண் 9845) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபாத் யூனியனில் உள்ள காமாட்சியம்மன் நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறதா அல்லது லாபத்தில் இயங்குகிறதா ?

(ஆ) இந்த நூற்பாலைக்கு பஞ்சு எங்கிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது?

(இ) உற்பத்தியாகும் நூல்கள் எம்முறையில் விற்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) வாலாஜாபாத் யூனியனில் உள்ள காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறது. நூற்பாலைக்குத் தேவையான பஞ்சு தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படுகிற நூல் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்பட்டது போக மீதம் இருக்கிற நூல் வெளிச் சந்தையிலே விற்கப்படுகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலைக்கு அரசு மூலம் ஏதாகிலும் நிதி வழங்கப்பட்டுள்ளதா? மேலும் கூட்டுறவு நூற்பாலைகள் சிறந்த முறையில் இயங்க அதனுடைய வளர்ச்சியைக் கருதி நிர்வாகக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.